# رِسَالَةٌ مُخْتَصَرَةٌ بِعُنْوَانِ:

# «كَيْفَ أَدْخُلُ فِي الإِسْلاَمِ؟»

## مُتَرْجَمَةٌ إِلَى اللُّغَةِ التاميلِيَّةِ

## « இஸ்லாத்தை தழுவுவது எப்படி?»


إِعْدَادُ الْفَقِيرِ إِلَى عَفْوِ رَبِّهِ:

**هَيْثَم بْنِ مُحَمَّدٍ سَرْحَان**

الـمُدرِّس بمعهد الحرم بالمسجد النَّبويِّ -سابقًا- والـمُشرِف على معهد السُّنَّة

https://mahadsunnah.com/


غفر الله له ولوالديه ولمن أعانه على إخراج هذا الكتاب

قامَ بتَرجَمَتِها: ...................... -وفَّقَهُ اللهُ وسَدَّدَهُ-


الطَّبعة الأولى



[حقوق الطَّبع مُتاحةٌ لكلِّ مسلمٍ بدون أيِّ تغييرٍ في المُحتوى]

| Question: | Answer: |
| --- | --- |
| இஸ்லாத்தை தழுவுவது இலகுவானதா? | ஆம்! அதற்கு சடங்குகளோ, இடைத்தரகர்களோ தேவையில்லை. |
| இஸ்லாத்தை ஏற்பதை துரிதப்படுத்த வேண்டுமா? அல்லது பொருத்தமான நேரத்தை, அல்லது சில பிரச்சினைகள் முடியும் வரை காத்திருக்க வேண்டுமா? | துரிதப்படுத்த வேண்டும் .இஸ்லாத்தை ஏற்பதை பிற்படுத்துவது ஆபத்துக்களை ஏற்படுத்தும், நமக்கு எப்போதும் மரணம் சம்பவிக்கலாம் .இஸ்லாத்தை ஏற்பது இலாபகரமான வியாபாரம் என்பதால் வியாபாரத்தில் எவ்வளவு தீவிரம் காட்டுவோமோ அதில் அதிக இலாபங்கள் கிடைக்கும். |
| இஸ்லாத்தை ஏற்க விரும்புபவர் என்ன செய்ய வேண்டும்? | அவர் ஷஹாதத் எனப்படும் கலிமாவை ஏற்று மொழிவதை தவிர வேறு ஒன்றும் இல்லை, அதுதான் வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனது திருத்தூதரும் என்றும் சான்று பகர்வதாகும். |
| எந்த மொழியில் அதை மொழியை வேண்டும்? | அவருக்கு பரீட்சையமான எம்மொழியிலும் அதைக் கூற முடியும் .அரபு மொழியில் தான் கூற வேண்டும் என்பது நிபந்தனையில்லை. |
| அர்த்தம் புரியாமல் அதைக் கூற முடியுமா? | இல்லை, அதன் பொருளை விளங்க வேண்டும், அது கொண்டிருக்கும் அம்சங்களை நம்ப வேண்டும், அதற்கேற்ப செயல்பட வேண்டும். |

| Question: | Answer: |
|---|---|
| "அஷ்ஹது" என்பதன் பொருள் என்ன? | அதன் பொருள் உள்ளத்தால் ஏற்று, நாவினால் மொழிந்து, உறுப்புக்களால் செயற்படுவதாகும். |
| " லாயிலாஹ இல்லல்லாஹ் " என்பதன் பொருள் என்ன? | அதன் பொருள் :சத்தியமாக வணங்கப்படுவதற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. |
| "அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ" என்பதன் பொருள் என்ன? | அதன் பொருள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியார், வணங்கப்படுபவர் அல்ல; அவர்கள் அல்லாஹ்வின் தூதர், அவர்களை யாரும் பொய்ப்பிக்க முடியாது.<br>இந்த ஷஹாதத்திலிருந்து பின்வரும் அம்சங்கள் அவசியமாகிறது :அவர்கள் சொன்னவற்றை உண்மைப்படுத்துவது, அவர்களின் கட்டளைகளுக்கு கட்டுப்படுவது, அவர்கள் தடுத்தவற்றை தவிர்ப்பது, அவர்களின் அடிச்சுவட்டுகளை பின்பற்றி அவர்களை முன்மாதிரியாக கொள்வது. |
| சரி, கலிமாவை நன்றாக விழங்கி விட்டேன். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? | என்னோடு சேர்ந்து நான் கூறுவதை கூறுங்கள் . அஷ்ஹது அல்லா இலாஹ இல்லழ்ழாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூல் அல்லாஹ். |

| Question: | Answer: |
|---|---|
| இப்போது நான் முஸ்லிமா? | ஆம், அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் ,இது அல்லாஹ் உங்களுக்கு செய்த மாபெரும் கிருபையாகும். |
| நான் முஸ்லிம் என்ற வகையில் இப்போது நீங்கள் எனக்கு என்ன அறிவுரை வழங்குகிறீர்கள்? | நாம் உமக்கு சொல்லும் அறிவுரை இம்மார்க்கத்தில் அல்லாஹ் உங்களை உறுதிப்படுத்த வேண்டும் என பிரார்த்திப்பதும், அதற்கு உதவியாக இருக்கின்ற நல்ல தோழமையை தெரிவு செய்வதும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் ஆபத்துக்கள் இருப்பின் இஸ்லாத்தை மறைமுகமாக பின்பற்றுவதும். |
| துவாக்களில் மிகச் சிறந்தது எது? | "நேரான பாதையை எங்களுக்கு காட்டுவாயாக "எனும் பிரார்த்தனையாகும். |
| இறை நினைவு (ஃதிக்ர்( களில் மிக இலகுவானது எது? | ஃதிக்றுகளில் மிக இலகுவானது ''பிஸ்மில்லாஹ்'' என்று சொல்வது .இதை பள்ளிவாசலில் ,வீடுகளில் நுழையும் போதும் வெளியேறும் போதும், குர்ஆனை ஓதும் போதும், குளியலறைக்கு செல்லும் போதும், ஆடைகளை களைவதற்கு முன்னரும், வுழூஃ செய்வதற்கு முன்பும், உண்ணல் பருகள் ஆகியவற்றுக்கு முன்னரும், மற்றும் இது போன்ற சந்தர்ப்பங்களில் கூற வேண்டும். |
| இஸ்லாத்தை தழுவுவதற்கு முன் நான் செய்த தவறுகளுக்கு என்ன | இஸ்லாத்தை ஏற்பது முன் சென்ற பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும் .ஆனால் பிற சகோதரர்களுக்கிடையிலான உரிமைகள், |

| Question: | Answer: |
|---|---|
| செய்வது? | கடமைகள் போன்றவற்றை மாத்திரம் நாம் முறையாக நிறைவேற்றி விட வேண்டும். |
| அதையடுத்து நான் என்ன செய்ய வேண்டும்? | நீங்கள் குளிக்க வேண்டும். |
| ஏன் குளிக்க வேண்டும்? | முதலாவது, ஒரு முஸ்லிம் மார்க்கத்தில் ஏன்? என கேட்பது நல்லதல்ல .மாறாக செவிமடுத்தோம் கட்டுப்பட்டோம் என்றே கூற வேண்டும்.<br><br>இரண்டாவது, குளித்துவிட்டு மேனியை சுத்தப்படுத்தி தூய்மையாகிக் கொள்ளல் நல்லது. |
| எப்படி குளிப்பது? | உள்ளத்தில் குளிக்கும் எண்ணத்தை உறுதியாக எண்ணிக் கொண்டு பிஸ்மில்லாஹ் அல்லாஹ்வின் பெயரால் என்று கூறி நீர் தன் மேனி பூராக சென்றடையும் வரை குளிக்க வேண்டும். |
| குளிப்புக்குப் பின் என்ன செய்வது? | தொழுகை நேரம் வந்துவிட்டால் தொழ வேண்டும்.. |
| தொழுகையில் நிறைய செயல்களும், துஆக்களும் உள்ளன, என்னால் அதை சரிவர நிறைவேற்ற முடியாது. | இஸ்லாம் இலகுவான மார்க்கம், அது கடினமான மார்க்கம் அல்ல .அல்லாஹ்வுக்கே எல்லா புகழும். |
| நான் எப்படித் தொழுவது? | என்னோடு சேர்ந்து நான் செய்வது போன்று என்னைப் பின்பற்றி தொழுங்கள். |

| Question: | Answer: |
|---|---|
| | அல்லது தொழும் முறையை செயல் வடிவில் கற்பிக்கும் காணொளிகளை பார்த்து கற்றுக் கொள்ளுங்கள்" .மஃஹதுஸ் ஸுன்னா "எனும் சேனல்களில் பல்வேறு மொழிகளில் காணொளிகள் காணப்படுகின்றன அதைச் சென்று பார்த்து கற்றுக் கொள்ளுங்கள் .அதன் இணைப்புகள் இப்பிரசுரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளன. |
| சரி, தொழுகைக்குப் பின்னால் என்ன செய்ய வேண்டும்? | நீங்கள் இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் எனப்படும் அம்சங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.<br>பின்னர் ஈமானின் அம்சங்கள் ஆறு உள்ளன அவற்றை கற்றுக் கொள்ள வேண்டும் . இவ்வாறே உங்கள் இஸ்லாமும், நம்பிக்கையும் பூரணப்பட இன்னும் நிறைய அம்சங்கள் உள்ளன அதையும் கற்றுக் கொண்டு செல்ல வேண்டும். |
| இஸ்லாத்தை கற்றுக் கொள்வதற்கு எனக்கு நீங்கள் பரிந்துரைக்கும் தளங்கள் என்ன? | சவுதி அரேபியாவில் இஸ்லாமிய அழைப்பு மையங்கள் உள்ளன, மேலும் மூத்த அறிஞர்களுக்கான இணையதளங்களும் உள்ளன அவற்றில் பிறவேசித்து கற்றுக் கொள்ளலாம். |
| முஸ்லிமல்லாத என் உறவுகளுடன் நான் எப்படி பழகுவது? | முஸ்லிமல்லாதவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் பழகியது போன்று நாம் பழகிக் கொள்ள முடியும் .நபி (ஸல்) அவர்கள் தனது உறவுகளுடன் தன் பேச்சினாலும், பண்பாட்டினாலும், அழகிய |

| Question: | Answer: |
| --- | --- |
| | அணுகுமுறையாலும் இஸ்லாத்தை அறிமுகம் செய்தார்கள். |
| இஸ்லாத்தை ஏற்கும் பலர் இருக்கின்றனர், ஆனால் அச்செய்தியை தன் குடும்பத்தினருக்கு அவர்கள் சொல்ல விரும்புவதில்லை, அது கூடுமா? | தான் இஸ்லாத்தை தழுவிய செய்தியை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டுமென்பது அவசியமில்லை .நமது இஸ்லாம் நமக்கும் நம் இறைவனுக்குமிடையில் உள்ளது. |
| இஸ்லாத்தில் மிகச் சிறந்த நூல் எது? | இஸ்லாத்தில் மிகச் சிறந்த நூல் திருமறை அல்குர்ஆன், அது அல்லாஹ்வின் பேச்சாகும். |
| குர்ஆனில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாயம் எது? | மிக முக்கியத்துவமிக்க அத்தியாயம் சூரா அல்ஃபாத்திஹா .ஆகவேதான், தொழுகையில் ஒவ்வொரு ரக்அத்திலும் நாம் அதை ஓதுகின்றோம். |
| குர்ஆனில் உள்ள மிக மகத்துவமிக்க வசனம் எது? | குர்ஆனில் மிக மகத்துவமிக்க வசனம் ஆயத்துல் குர்ஸி. |
| நான் குர்ஆனை ஓதுவது எப்படி? | குர்ஆனை ஓதக் கற்றுக்கொள்வதன் மூலம், தலைசிறந்த காரிகளான ஷேக் அல் ஹுதைபி, ஷேக் அல் குசரி போன்றவர்கள் ஓதுவதை கேட்டும் கற்றுக் கொள்ளலாம். |

| Question: | Answer: |
| --- | --- |
| நான் குர்ஆனை விளங்குவது எப்படி? | அதற்கென அறிஞர்களால் தொகுக்கப்பட்ட விரிவுரை நூல்களில் அதன் விளக்கங்களை பெற்றுக் கொள்ளலாம். |
| குர்ஆனின் விரிவுரைகளை எங்கே பெற்றுக் கொள்ளலாம்? | மதீனா முனவ்வராவில் திருக்குர்ஆன் அச்சகத்தின் வெளியீடுகளின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். |
| குர்ஆனுக்கு அடுத்து நான் படிக்க வேண்டியது எது? | அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்)அவர்களின் ஆதாரபூர்வமான பொன்மொழிகளை கற்றுக் கொள்ள வேண்டும். |
| நபி மொழிகள் தொகுப்பில் மிகச் சிறந்த நூல் எது? | அந்நூல்களில் மிகச்சிறந்ததும் சரியானதும் ஸஹீஹ் அல் புகாரி எனப்படும் நூலாகும் . இந்நூலை ஒட்டுமொத்த அறிஞர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர் . இதற்கான இணைப்புகளை இப் பிரசுத்தின் இறுதியில் பெற்றுக் கொள்ளலாம். |
| நபி மொழிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நபிமொழி எது? | மிக முக்கியத்துவமிக்க நபிமொழி ஜிப்ரீல் அவர்கள் சம்பந்தப்படும் நபி மொழியாகும். அதில் இம்மார்க்கத்தின் மூன்று படித்தரங்கள் எனப்படும் இஸ்லாம், ஈமான், இஹ்சான் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. |

| Question: | Answer: |
| --- | --- |
| இஸ்லாத்தை கற்றுக் கொள்வதற்கு என்னால் முடியாமல் போய்விடும் என்று நான் பயப்படுகிறேன். | பயம் வேண்டாம் !அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து முயற்சி செய்யுங்கள், உங்கள் முயற்சிக்கு அல்லாஹ் உதவி புரிவான் . மார்க்கம் இலகுவானது,அல்லாஹ் உங்களுக்கு அவன் விரும்பும் இச்செயல்களை நிறைவேற்ற நல்லுதவி நல்குவானாக .<br><br>நீங்கள் எம்முனுடன் இணைந்து அஸ் ஸுன்னா இணையதளத்தின் தொலைக் கல்வி ஊடாக இலவசமாக கற்றுக் கொள்ள முடியும்.<br><br>இறுதியாக உங்களுக்கு நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவுரையை கூறி முடிக்கிறேன்:<br><br>"உங்களுக்கு பயனுள்ளவற்றில் அக்கறை செலுத்துங்கள், அல்லாஹ்வைக் கொண்டு உதவி தேடுங்கள், இயலாது என்று இருந்து விடாதீர்கள். |

# MAHADSUNNAH WEBSITE CHANNELS:

| | | |
|---|---|---|
| TELEGRAM | FACEBOOK | MAHADSUNNAH |
| WHATSAPP | (X) | INSTAGRAM |
| | BOOKS | YOUTUBE |